**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II, VELLORE**

**DEPOSITION OF WITNESS**

**CC.No.106/2018**
**IN**
**Cr.No.41/2014**
**DCB-II, Thirupathur**

Deposition of Prosecution witness : **PW8 (LW7)**

Name : ஜோதிபிரசாத்

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of July 2026 at Time 12.43 p.m to 12.56 p.m**

**2ம் எதிரி Personal appearance dispensed with. 1ம் எதிரி ஆஜர். 3ம் எதிரி ஆஜரில்லை, அவர் தரப்பில் மனு அளித்து அனுமதிக்கப்பட்டுள்ளது. 1 மற்றும் 3ம் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**மனு அளித்து அனுமதிக்கப்பட்டதன் பேரில் அ.சா.8ன் 1 மற்றும் 3ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

இந்துமதி மற்றும் தேவன் அவர்களுக்கு இடையே என்ன பிரச்சனை என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் காவல் அதிகாரிகள் முன்பு கையொப்பம் போட்டதாக எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் ஆனால் அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, படித்து பார்த்து தான் போட்டேன். அதில் இருந்தது என்ற விவரம் சொல்ல முடியுமா என்றால் தெளிவாக தெரியாது ஆனால் அளவு எடுத்து வரைபடம் தயார் செய்தார்கள் அதில் நான் கையொப்பம் இட்டேன். அந்த அளவு எடுக்கும்போது VAO மற்றும் நில அளவையர் இருந்தார்களா என்றால் இல்லை.

நிலத்தை அளந்து பார்க்கும்போது 30 நபர்கள் இருந்திருப்பார்களா என்றால் 3லிருந்து 4 நபர்கள் இருந்தார்கள். யார் யார் இருந்தார்கள் என்ற விவரம் என்னால் சொல்ல முடியுமா என்றால் எனக்கு யார் யார் என்ற விவரம் தெரியாது, சர்வேயர் பார்ப்பதற்காக வந்திருந்தார் என்பது மட்டும் தான் தெரியும். நான் ே ஹாட்டல் வைத்திருந்ததாக சொல்லியுள்ளேன் அதன் பெயர் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை ேஹாட்டலின் பெயர் சாய்பவன் ஆகும்.

இந்துமதி என்பவர் சாய்பாபா கோவில் வைத்து நடத்தி வருகிறார் என்றால் சரிதான். இந்துமதி நடத்தி வரும் சாய்பாபா கோவிலுக்கு நான் வந்து செல்வேன் எனவே இந்துமதி கேட்டுகொண்டதற்கு இணங்க நான் போலிசார் கேட்டுக்கொண்ட இடத்தில் சாட்சி கையொப்பம் இட்டுள்ளேன் என்றால் சரிதான்.

**1 மற்றும் 3ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

**<u>மறுவிசாரணை–</u>இல்லை.**

"27.07.2026 ஆகிய இன்று என்னால் / என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டசரால ் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு விளக்கப்பட்டு / படித்து காண்பிக்கப்பட்டு, அது சரியென வாக்குமூலத்தாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது".

RUDHRA R Digitally signed by RUDHRA R Date: 2026.07.27 17:14:06 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**வேலூர்.**